

தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் அய்யனார் கோவில் பகுதி‍II திட்டப் பகுதியில் ரூபாய் 197.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 969 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி.சிங், மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம்,தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் தலைமை பொறியாளர் வி.எஸ்.கிருஷ்ணசாமி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### 100 நாள் வேலைத் திட்ட ஒழிப்பு! நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம்!

# ஒரே தீர்வு - முதல்வர் மு.க.ஸ்டாலினின் பொற்கால ஆட்சி தொடர வேண்டும்!

## கரூர் கண்டன ஆர்ப்பாட்டம் – மாவட்டச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு!

**கரூர், டிச.28-**

**ஒன்றிய பாஜக. ஆட்சிக்கு வந்ததிலிருந்து நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம், சிறப்புத் திட்டம் இல்லை,**

**100 நாள் வேலை திட்டம் ஒழிப்பு என தொடர்ந்து மக்களை வஞ்சித்து வருகிறது. இதற்கு ஒரே தீர்வு மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சி மீண்டும் தொடர்ந்திட வேண்டும் என்பது தான் என கரூரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ பேசினார்.**



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில், 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசையும், ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வெண்ணைமலை, கரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்றது.

இதில் கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ கண்டன உரையாற்றியதாவது:

ஒன்றிய பா.ஜ.க. அரசு மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்தும், தமிழ்நாட்டு மக்களுக்கு இதுவரை எந்த நன்மையும் கிடைக்கவில்லை. எய்ம்ஸ் மருத்துவமனை இன்னும் கட்டவில்லை. மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி கொடுக்காமல் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. நிதியை வழங்காமல் மாற்றாந்தாய் மனப்பான்மையை கடைப்பிடித்து வருகிறது. கடைசியில் 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கப்போகிறது பாஜக அரசு.

உபிக்கு ரூ.3 கோடி மட்டுமே பாக்கி வைத்திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிற்கு ரூ.1300 கோடி அளவுக்கு நிதியை தரவில்லை. 100 நாள் வேலை திட்டத்திற்கு 86 ஆயிரம் கோடி அளவிற்கு நிதியை தமிழ்நாட்டிற்கு தராமல் உள்ளது ஒன்றிய பாஜக அரசு. திமுக காங்கிரஸ் கூட்டணி ஆட்சி இருந்த போது கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்திற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டம் என பெயர் வைத்து

கிராமப்புற மக்கள் வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டது. ஒரு அரசு புதிய திட்டத்தை கொண்டு வந்தால் பெயர் வைக்கலாம். ஆனால் இவர்கள் கொண்டு வராத திட்டத்திற்கு பெயரை மாற்றுவது அநீதி. இதன் மூலம் மீண்டும் மகாத்மா காந்தியை படுகொலை செய்வது போல இருக்கிறது.

மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்தும் தமிழ்நாட்டிற்கு சிறப்பு திட்டம் ஏதாவது நிறைவேற்றினார்களா?. ஒருதிட்டத்தையாவது நிறைவேற்றினோம் என்று கூற முடியுமா?. அல்லது கரூர் மாவட்டத்திற்கு ஏதாவது ஒரு சிறப்பு திட்டம் உண்டா?. எதுவும் கிடையாது. நமது வரிப் பணத்தை வாங்கி பாஜக ஆளும் மாநிலங்களுக்கு கொண்டு போய் கொடுக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரே தீர்வு தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டா ன் அவர்களின் பொற்கால ஆட்சி மீண்டும் தொடர்ந்திட வேண்டும் என்பதுதான்.

**கோவில் நிலப்பிரச்ச னைக்கு விரைவில் சட்டப்படி தீர்வு**

கரூர் வெண்ணைமலை கோவில்நிலப்பிரச்சனைக்கு தீர்வு காண திராவிட மாடல் அரசு அனைத்து பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இது ஏதோ இப்போது தொடங்கிய பிரச்சினை என நினைத்துவிட வேண்டாம். இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமைக்கு காரணம் கடந்த கால அதிமுக ஆட்சி தான். அதிமுக ஆட்சியில் பொறுப்பில் இருந்தவர்கள் செய்த தவறுகள் தான். அவர்கள் சரியாக செய்யாத காரணத்தினால் பிரச்சனை ஏற்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சட்டப்படி ஒரு நல்ல தீர்வை எட்ட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். அதையும் சரி செய்து சட்டரீதியான தீர்வு விரைவில் ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு வி.செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் மாவட்டத்தில் குளித்தலை தொகுதியில் இரா. மாணிக்கம் எம்.எல்.ஏ. தலைமையிலும், அரவக்குறிச்சி தொகுதியில் ஆர். இளங்கோ எம்.எல்.ஏ. தலைமையிலும், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் க.சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ. தலைமையிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாநில நிர்வாகிகள் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டகிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர்,டிச.28-



பெரம்பலூர் மாவட்டத்தில், கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை, முன்னிட்டு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கை வருமாறு:-

கழக துணைப்பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி., வழிகாட்டுதல்படி,

போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனையின் பேரில்,

பெரம்பலூர் மாவட்டத்தில் ஒன்றியம்,நகரம்,பேரூர் கழகங்களில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறுகிறது.

*27.12.2025* வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம் கள்ளப்பட்டி, மாவிலங்கை ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டத்தில் ஜோ. கேத்ரின் மெர்லினா கலந்து கொண்டு பேசுகிறார். இன்று (28.12.2025) வேப்பூர் தெற்கு ஒன்றியம்கொளப்பாடி, பெரியவெண்மணி ஆகிய இடங்களில் தடைபெறும் கூட்டத்தில் சேலம் சுஜாதா கலந்து கொண்டு பேசுகிறார். நாளை (29.12.2025) வேப்பூர் கிழக்கு ஒன்றியம் கிழுமத்தூர்,வடக்கலூர் ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டத்தில் வா.ராஜேஸ்வரி கலந்து கொண்டு பேசுகிறார். *30.12.2025* ஆலத்தூர் மேற்கு ஒன்றியம் து.களத்தூர், நக்கசேலம் ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டத்தில் தன்ஸீம் இளம் கலந்து கொண்டு பேசுகிறார். 31.12.2025 வேப்பந்தடை கிழக்கு ஒன்றியம் அனுக்கூர், மங்களமேடு ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டத்தில் சி. ஷாலினி கலந்து கொண்டு பேசுகிறார்.

*03.01.2026* குரும்பலூர் பேரூர் அண்ணாசிலை அருகில் நடைபெறும் கூட்டத்தில் ஜே.விக்னேஷ்வரி கலந்து கொண்டு பேசுகிறார். 04.01.2026 பெரம்பலூர் ஒன்றியம் சிறு வாச்சூர்,செஞ்சேரி, எளம்பலூர் ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டத்தில் மேட்டுப்பாளையம் நாக.நந்தினி கலந்து கொண்டு பேசுகிறார். 05.01.2026 ஆலத்தூர் கிழக்கு ஒனறியம் சடைக்கம்பட்டி, அல்லிநகரம் ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டத்தில் செல்வி காருண்யா கலந்து கொண்டு பேசுகிறார்.

*06.01.2026* பெரம்பலூர் நகரம் துறைமங்கலம், பழையபேருந்து நிலையம், அரனாரை ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டத்தில் சிந்துநதி கலந்து கொண்டு பேசுகிறார். *07.01.2026* லெப்பைக்குடிக்காடு பேரூர் கலைஞர் திடல் பேருந்துநிலையம், அ.தீன்ஷா நாப் கலந்து கொண்டு பேசுகிறார். *08.01.2026* அரும்பாவூர் பேரூர்கலைஞர் திடல் அ. சுஹாசினி கலந்து கொண்டு பேசுகிறார்.

மேகண்ட கூட்டங்களை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச்செயலாளர்கள் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அண்ணன் காந்தியடிகள் அவர்களின் பெயரை நீக்கி100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர், பேரூர் செயலாளர்கள் எஸ்.எம்.எஸ்.பாலசுப்ரமணியன், ஜபுருதீன் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி அறந்தாங்கி மேற்கு ஒன்றியம் சுனையக்காடு ஊராட்சியில் “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்டு பாக முகவர்,பாகநிலை உறுப்பினர்கள், பாக நிலை டிஜிட்டல் முகவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு இல்லம் தோறும் சென்று பரப்புரை பணியில் ஈடுபட்டு‘திராவிட மாடல்’அரசின் சாதனைகளை எடுத்துக்கூறி பரப்புரை பணியில் ஈடுபட்டார். இந்த நிகழ்வில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் எழில்மாறன் செல்வேந்திரன், திருவரங்குளம் தெற்கு ஒன்றில செயலாளர் அரு.வடிவேல், மகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தை

# சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. தலைமையில்!

நாமக்கல், டிச.28-

100 நாள் வேலை திட்டத்தை சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் நாமக்கல் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும்,நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நீலவானத்து நிலவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அன்புமணி, ஐக்கிய ஜமாத் அனைத்து பள்ளி மற்றும் அனைத்து இஸ்லாமிய இயக்க மாவட்டத் தலைவர் அல்ஹாஜ் தவுலப் கான், ஆதித்தமிழர் பேரவை மணிமாறன், காங்கிரஸ் கட்சி பிவி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவகுமார், ஒன்றிய செயலாளர் பழனிவேல், தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன், மாநில நிர்வாகிகள் ப.ராணி இரா.நக்கீரன், சார்பு அணி நிர்வாகிகள் சி. விஸ்வநாத், ப.கிருபாகரன், பொன்.சித்தார்த், மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட உள்ளிட்ட 3000 திற்கும் மேற்பட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

அதேபோல் புதுச்சத்திரம் தெற்கு மற்றும் வடக்கு ஒன்றியத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் தலைமையிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கந்தசாமி, தமிழ் புலிகள் கட்சி குமரவேல் ஆகியோர் முன்னிலையிலும்,

மோகனூர் ஒன்றியத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான் தலைமையிலும்,

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி மேற்கு மாவட்ட செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வி.எஸ்.மாதேஸ்வரன் தலைமையில், மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் ரேகா பிரியதர்ஷினி,, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சேகர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முகமது மூபின், மனிதநேய மக்கள் கட்சி சுல்தான் பாஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொல்லிமலை ஒன்றியத்தில் தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரிய தலைவர் கனிமொழி தலைமையிலும், எருமப்பட்டி ஒன்றியத்தில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி தலைமையிலும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சித்திக் ஆகியோர் முன்னிலையிலும், ராசிபுரம் ஒன்றியத்தில் கழகத் தீர்மான குழு துணை தலைவர் பார். இளங்கோவன் தலைமையிலும், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் மும்பை அர்ஜ¯னன், ஆதித்தமிழர் கட்சி இராவணன், ஆதித்தமிழர் பேரவை நீல வேங்கை ஆகியோர் முன்னிலையிலும்,

வெண்ணந்தூர் ஒன்றியத்தில் மாவட்ட கழக பொருளாளர் பாலச்சந்திரன் தலைமையிலும், தமிழ் புலிகள் கட்சி வினோத் சேகுவேரா முன்னிலையிலும,

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமை தலைமையிலும் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஒன்றிய பாஜக அரசு கண்டித்து நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க.அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தஞ்சை மத்திய மாவட்டம், பூதலூரில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. இக்கண்ட ஆர்ப்பாட்டத்தில் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.




கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சித் தோழர்கள் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.